இனிமையான குழந்தைகளே! நீங்கள் பிரம்மாவின் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சகோதர-சகோதரிகள், உங்களுடைய உள்ளுணர்வு மிகவும் சுத்தமானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க வேண்டும்.

கேள்வி: எந்தக் குழந்தைகள் புரிய வைப்பதன் மூலம் தாக்கம் மிகவும் நன்றாக ஏற்பட முடியும்?

பதில்: இல்லற விசயங்களில் இருந்தபடி தாமரை மலர் போல் தூய்மையாக இருப்பவர்கள். இப்படிப்பட்ட அனுபவம் நிறைந்த குழந்தைகள் யாருக்குப் புரிய வைத்தாலும் அவர்கள் புரிய வைப்பதன் மூலம் நன்றாக தாக்கம் ஏற்படும், ஏனென்றால் திருமணம் ஆகியும் கூட தூய்மையற்ற உள்ளுணர்வு இல்லாதிருப்பது என்பது மிகப் பெரிய இலட்சியமாகும். இதில் குழந்தைகள் மிக மிக எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

பாடல்: நம்முடைய தீர்த்த ஸ்தலம் தனிப்பட்டது...

ஓம் சாந்தி. தந்தை அமர்ந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார், ஏனென்றால் குழந்தைகள் தான் தந்தையைத் தெரிந்து கொள்கின்றனர். குழந்தைகள் அனைவரும் குழந்தைகளே, அனைத்து குழந்தைகளும் பிரம்மா குமார்-குமாரிகள் ஆவார்கள், பிரம்மா குமார்-குமாரிகள் தங்களுக்குள் சகோதர-சகோதரி என்று அவர்கள் அறிவார்கள். அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள் எனும் போது ஆத்மாக்களாகிய நாம் அனைவரும் சகோதர-சகோதரிகள் எனும் உண்மையைப் புரிய வைக்க வேண்டும். அனைவரும் சகோதரர்கள் ஆவார்கள். நாம் ஒரே தாத்தா மற்றும் தந்தையின் குழந்தைகள் என்று இங்கே நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சிவபாபாவின் பேரன்கள், பிரம்மாவின் குழந்தைகள். இவருடைய லௌகிக மனைவி இருக்கிறார், அவர் கூட நான் பிரம்மா குமாரி என்று கூறுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போது அவருக்கும் கூட இதே உறவு என்று ஆகி விடுகிறது. லௌகிக சகோதர-சகோதரி இருப்பதைப் போல, அவர்களுக்குள் எந்த அழுக்கான பார்வையும் இருப்பதில்லை. இன்றைய நாட்களில் அனைவரும் அழுக்காகி உள்ளனர். ஏனென்றால் உலகமே அழுக்காக உள்ளது. நாம் பிரம்மா குமார்-குமாரிகள் என்பதை குழந்தை களாகிய நீங்கள் இப்போது புரிந்துக் கொள்கிறீர்கள். பிரம்மாவின் மூலம் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளாக ஆகியுள்ளனர் என்றால் சகோதர-சகோதரி ஆவார்கள். சன்னியாசமும் கூட இரண்டு விதமாக உள்ளன. சன்னியாசம் என்றால் தூய்மையாக இருத்தல், 5 விகாரங்களை விடுதல். அவர்கள் ஹடயோக சந்நியாசிகள், அவர்களுடைய துறையே வேறு. இல்லறத்தவர் களின் தொடர்பையே விட்டுச் செல்கின்றனர், அவர்களுடைய பெயரே ஹடயோக கர்ம சன்னியாசி. இல்லறத்தில் இருந்தபடி தேகத்துடன் சேர்த்து தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் தியாகம் செய்து தந்தையை நினைவு செய்ய வேண்டும் என்று குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. அவர்கள் (சன்னியாசிகள்) வீடு வாசலை விட்டு விடுகின்றனர். மாமா, சித்தப்பா, பெரியப்பா யாரும் இருப்பதில்லை. மீதம் இருப்பவர் ஒருவர்தான், அவரைத்தான் நினைவு செய்ய வேண்டும் அல்லது ஜோதியுடன் ஜோதியாய் ஐக்கியமாக வேண்டும் நிர்வாண தாமம் செல்ல வேண்டும் என்று புரிந்து கொள்கின்றனர். அவர்களின் துறையே தனிப்பட்டது,

பெண் நரகத்தின் வாசல், பஞ்சும் நெருப்பும் ஒன்றாக இருக்க முடியாது, தனியாகச் சென்றால் தான் நாங்கள் தப்பிக்க முடியும் என்று அவர்கள் கூறி விடுகின்றனர். நாடகத்தின்படி அவர்களின் தர்மமே தனிப்பட்ட தாகும். அந்த ஸ்தாபனை சங்கராச்சாரியருடையது, அவர் ஹடயோகத்தை, கர்ம சன்னியாசத்தைக் கற்றுக் கொடுக்கிறார், இராஜயோகத்தை அல்ல. நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது, அதிலும் வரிசைக் கிரமமாக உள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். 100 சதவிகிதம் புத்திசாலிகள் என்று யாரையும் கூறுவதில்லை. ஆனாலும் சிலர் 100 சதவிகிதம் புத்திசாலிகளாக உள்ளனர், சிலர் 100 சதவிகிதம் முட்டாள்களாக உள்ளனர் என்று கூறுவோம். இது நடக்கவே செய்யும். நாம் மம்மா-பாபா என்று கூறுகிறோம் என்றால் ஒருவருக்கொருவர் சகோதர-சகோதரி ஆகிவிட்டோம் என்று நீங்கள் அறிவீர்கள். அழுக்கான உள்ளுணர்வு இருக்கக் கூடாது என்று சட்டம் சொல்கிறது. சகோதர-சகோதரியருக்கிடையில் ஒருபோதும் திருமணம் நடக்க முடியாது. சகோதர- சகோதரிக் கிடையில் வீட்டில் ஏதாவது நடந்தது என்றால், இவர்களின் நடத்தை அழுக்காக உள்ளது என்பதை தந்தை பார்த்தால் மிகவும் கவலை ஏற்படுகிறது. இவர்கள் எங்கிருந்து பிறந்தார்கள், எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று நினைத்தபடி அவர்களை மிகவும் திட்டுகிறார்கள். முன்னர் இந்த விசயங்களில் மிகவும் பத்தியம் இருந்தது. இப்போது 100 சதவிகிதம் தமோபிரதானமாக, மாயை யின் தாக்கத்தினால் பாதிப்பு மிகவும் அதிகமாக உள்ளது. பரமபிதா பரமாத்மாவின் குழந்தை களிடம் மாயையின் சண்டை ஒரேடியாக ஏற்படுகிறது. தந்தை கூறுகிறார் - இவர்கள் என்னுடைய குழந்தைகள், நான் இவர்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறேன். இவர்கள் என்னுடைய குழந்தைகள், இவர்களை நான் நரகத்திற்கு அழைத்துச் செல்வேன் என்று மாயா கூறுகிறது. இங்கே தர்மராஜாவோ தந்தையின் கைகளில் இருக்கிறார். ஆக, இல்லற விஷயங்களில் இருந்தபடி தூய்மையாக இருப்பவர்கள் மற்றவர்களுக்கு நாங்கள் எப்படி ஒன்றாக இருந்தபடி தூய்மையாக இருக்கிறோம் என்பதை மிக நல்ல விதத்தில் புரிய வைக்க வேண்டும். ஹட யோகி சன்னியாசி களும் செய்ய முடியாத காரியத்தை தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். சன்னியாசிகள் ஒருபோதும் இராஜயோகம் கற்றுத் தர முடியாது. விவேகானந்தரின் புத்தகத்தில் வெளியே இராஜ யோகம் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. ஆனால் துறவற மார்க்கத்தைச் சேர்ந்த சன்னியாசிகள் இராஜயோகம் கற்றுத் தர முடியாது. இல்லற விஷயங்களில் இருந்தபடி தூய்மையாக இருப்பதை புரிய வைத்தீர்கள் என்றால் அந்த அம்பு நன்றாக தைக்கும். டில்லியில் மரங்களைக் குறித்த ஏதோ மாநாடு நடக்கிறது என்று பாபா செய்தித்தாளில் பார்த்திருந்தார். அதனை வைத்தும் கூட எப்படி புரிய வைக்கலாம் - நீங்கள் இந்த காட்டு மரங்கள் முதலானவற்றைக் குறித்து சிந்திக்கிறீர்கள், ஆனால் எப்போதாவது இந்த மனித சிருஷ்டி எப்படி உற்பத்தியாகி வளர்கிறது என்று இந்த சிருஷ்டி மரத்தைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

குழந்தைகளின் புத்தி அந்த அளவு விசாலமாக ஆகவில்லை. அவ்வளவு கவனம் இருப்பதில்லை. ஏதாவது ஒரு நோய் ஏற்பட்டிருக்கிறது. லௌகிக வீட்டில் கூட சகோதர-சகோதரியின் சிந்தனை அழுக்காக இருப்பதில்லை. இங்கே நீங்கள் அனைவரும் ஒரு தந்தையின் குழந்தைகள் சகோதர-சகோதரி, பிரம்மா குமார்-குமாரிகள். அழுக்கான சிந்தனை வந்தது என்றால் அவர்களை என்ன

வென்று கூறுவது? அவர்கள் நரகத்தில் இருப்பவர்களை விடவும் ஆயிரம் மடங்கு அழுக்கானவர் களாக கருதப்படுவார்கள். குழந்தைகளுக்கு அதிக பொறுப்பு உள்ளது. இல்லற விஷயங்களில் இருந்தபடி தூய்மையாக இருப்பவர்களுக்கு மிகவும் முயற்சி தேவைப்படுகிறது. உலகம் இந்த விஷயங்களைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. தூய்மைப்படுத்த தந்தை வருகிறார் எனும்போது கண்டிப்பாக குழந்தைகள் வாக்குறுதி கொடுப்பார்கள், ராக்கி கட்டப்பட்டுள்ளது. இதில் அதிகம் உழைக்க வேண்டியுள்ளது. திருமணம் ஆகி தூய்மையாக இருப்பது என்பது மிகப் பெரிய இலட்சியமாகும். கொஞ்சமும் புத்தி தவறாக செல்லக் கூடாது. திருமணம் ஆகிவிடுகிறது என்றால் விகாரிகள் ஆகி விடுகின்றனர். தந்தை வந்து தூய்மையை இழப்பதிலிருந்து காப்பாற்றுகிறார். சாஸ்திரங்களில் திரௌபதியின் விஷயம் கூட உள்ளது. இந்த விஷயங்களில் கொஞ்சம் ரகசியம் உள்ளதல்லவா. இந்த சாஸ்திரம் முதலானவை நாடகத்தில் பதிவாகியுள்ளது. உங்களுடைய புத்தி இப்போது மிகவும் விசாலமாகி யுள்ளது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் புத்தியைப்போல ஸ்ரீமத்படி நடக்கும் அன்பான குழந்தைகளின் புத்தியும் உள்ளது. அளவற்ற குழந்தைகள் உள்ளனர். சரியாக எத்தனை குழந்தைகள் இருப்பார்கள் என்று தெரிவதில்லை. பிராமண பிராமணியாக ஆகாதவரை ஆஸ்தி பெற முடியாது. இப்போது பிரம்மா வம்சத்தவராக உள்ள நீங்கள்தான் சென்று சூரிய வம்சத்தவராக அல்லது விஷ்ணு வம்சத்தவராக ஆவீர்கள். இப்போது சிவ வம்சத்தவராக உள்ளீர்கள். சிவன் தாத்தாவாக இருக்கிறார், பிரம்மா தந்தையாக இருக்கிறார். அனைத்து பிரஜைகளின் பிரஜாபிதா ஒருவர் உள்ளார் அல்லவா. மனித சிருஷ்டியின் மரத்தின் விதையும் கூட இருக்கும் என்று தெரிந்துள்ளனர் அல்லவா. இதில் முதல் மனிதரும் இருப்பார், அவரை புதிய மனிதர் என்று கூறுகின்றனர். புதிய மனிதராக யார் இருப்பார்? பிரம்மா தான் இருப்பார். பிரம்மா மற்றும் சரஸ்வதி- இவர்கள் புதியவர்களாக கருதப்படுவார்கள். இதில் பெரிய புத்தி தேவைப் படுகிறது. ஓ இறைத் தந்தையே, ஓ பரம தந்தையே என்று ஆத்மாதான் கூறுகிறது. அவர் அனை வரையும் படைப்பவர் என்று ஆத்மா கூறுகிறதல்லவா. அவர் உயர்விலும் உயர்வானவராக உள்ளார். பிறகு மனித சிருஷ்டிக்கு வாருங்கள் - அதில் உயர்வானவராக யாரை வைப்போம்? பிரஜாபிதா. மனித சிருஷ்டியின் மரத்தில் பிரம்மா முக்கியமானவர் என்பதை யார் வேண்டு மானாலும் புரிந்து கொள்ள முடியும். சிவன் ஆத்மாக்களின் தந்தையாக இருப்பவர். பிரம்மாவை மனிதர்களைப் படைப்பவர் என்று கூற முடியும். ஆனால் யாருடைய வழிப்படி செய்கிறார்? நான்தான் பிரம்மாவை தத்தெடுக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். புதிதாக பிரம்மா பிறகு எங்கிருந்து வருவார்? பல பிறவிகளின் இறுதிப் பிறவியில் நான் இவருக்குள் பிரவேசம் செய்கிறேன். இவருடைய பெயரை பிரஜாபிதா பிரம்மா என வைக்கிறேன். நாம் பிரம்மாவின் குழந்தைகள் என்று நீங்கள் இப்போது அறிந்துள்ளீர்கள். சிவபாபாவிடமிருந்து ஞானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் தந்தையிடமிருந்து தூய்மை, சுகம், அமைதி, ஆரோக்கியம், செல்வம் அனைத்தும் எடுக்க வந்துள்ளோம். பாரதத்தில் நாம்தான் எப்போதும் சுகம் நிறைந்தவர்களாக இருந்தோம். இப்போது இல்லை. மீண்டும் தந்தை அந்த ஆஸ்தியை கொடுத்துக் கொண்டிருக் கிறார். தூய்மை முதன்மையானது என்று குழந்தைகளுக்குத் தெரியும். ராக்கி யாருக்கு கட்டப்ப டுகிறது? யார் தூய்மையற்றவராக ஆகின்றனரோ அவர்கள் நாங்கள் தூய்மையாக இருப்போம் என்று வாக்குறுதி கொடுக்கின்றனர். இந்த இலட்சியம் மிகவும் பெரியது என்று

தந்தை புரிய வைக்கிறார். நாங்கள் எப்படி சகோதர-சகோதரியாக இருக்கிறோம் என்று முதலிலேயே தம்பதி களாக இருப்பவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். ஆம், அந்த நிலையை உருவாக்குவதில் நேரம் பிடிக்கிறது. மாயாவின் புயல் காற்று நிறைய வருகின்றன என்று குழந்தைகள் எழுதவும் செய்கின்றனர். ஆக, இல்லற விஷயங்களில் இருந்தபடி தூய்மையாய் இருக்கும் குழந்தைகள் சொற்பொழிவு ஆற்றினால் நன்றாக இருக்கும், ஏனென்றால் இது புதிய விஷயமாகும். இது சுய இராஜயோகம். இதிலும் கூட சன்னியாசம் உள்ளது. இல்லற விஷயங்களில் இருந்தபடி நாம் ஜீவன்முக்தி அதாவது சத்கதியை அடைய வேண்டும். இது ஜீவன் பந்தனமாகும். உங்களுடையது சுயராஜ்ய பதவியாகும். சுயத்திற்கு இராஜ்யம் தேவை. இப்போது அவர்களுக்கு இராஜ்யம் இல்லை. ஆத்மா கூறுகிறது - நாங்கள் ராஜாவாக இருந்தோம், நாங்கள் ராணியாக இருந்தோம், இப்போது விகாரிகளாக ஏழைகளாக ஆகியுள்ளோம், எங்களுக்குள் எந்த குணங்களும் இல்லை. இதை ஆத்மா கூறுகிறது அல்லவா! ஆக தன்னை ஆத்மா, பரமபிதா பரமாத்மாவின் குழந்தை என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.ஆத்மாக்களாகிய நாம் சகோதரன்-சகோதரனாக உள்ளோம், ஒருவருக் கொருவர் மிகவும் அன்புடன் இருக்க வேண்டும். நாம் முழு உலகத்தையும் அன்பு நிறைந்ததாக ஆக்குகிறோம். இராம இராஜ்யத்தில் சிங்கமும் ஆடும் ஒன்றாக நீர் குடித்துக் கொண்டிருந்தன, ஒரு போதும் சண்டை போட்டுக் கொண்டிருக்க வில்லை எனும்போது குழந்தைகளாகிய உங்களுக்குள் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். இந்த நிலை மெது மெதுவாக வரும். நிறைய சண்டை போடுகின்றனர் அல்லவா. பாராளுமன்றத்தில் கூட சண்டை போடும்போது நாற்காலியை எடுத்து ஒருவர் மீது ஒருவர் அடிக்கத் தொடங்கி விடுகின்றனர். அது அசுர சபையாகும். இது உங்களுடைய ஈஸ்வரிய சபை எனும்போது எவ்வளவு போதை இருக்க வேண்டும். ஆனால் இது பள்ளிக்கூடம். படிப்பில் சிலர் மேலே சென்று விடுகின்றனர், சிலர் மந்தமானவர்களாக ஆகி விடுகின்றனர். இந்த பள்ளிக்கூடம் அதிசயமானது. அங்கே பள்ளி ஆசிரியர்கள் தனித்தனியாக இருப்பார்கள். இங்கே பள்ளி ஆசிரியர் ஒருவர், பள்ளிக்கூடமும் ஒன்றாகும். ஆத்மா சரீரத்தை தாரணை செய்து சொல்லிக் கொடுக்கிறது. ஆத்மாவுக்கு கற்றுக் கொடுக்கின்றனர். ஆத்மாக்களாகிய நாம் சரீரத்தின் மூலம் படிக்கிறோம். அந்த அளவு ஆத்ம அபிமானி ஆக வேண்டும். நாம் ஆத்மாக்கள், அவர் பரமாத்மா. இதை புத்தியில் முழு நாளும் ஓட வைக்க வேண்டும். தேக அபிமானத்தின் மூலம்தான் தவறுகள் ஏற்படுகின்றன. தந்தை மீண்டும் மீண்டும் கூறுகிறார் - ஆத்ம அபிமானி ஆகுங்கள். தேக அபிமானத்தில் வருவதன் மூலம் மாயை யின் சண்டை ஏற்படும். ஏணி மிகப் பெரியதாகும். எவ்வளவு மனன சிந்தனை செய்ய வேண்டியுள்ளது. இரவில் தான் மனன சிந்தனை செய்ய முடியும். இப்படி மனன சிந்தனை செய்து செய்து தந்தை போல ஆகிக்கொண்டே போவீர்கள்.

குழந்தைகளாகிய நீங்கள் முழு ஞானத்தையும் புத்தியில் வைக்க வேண்டும். இல்லற விஷயங் களில் இருந்துகொண்டே இராஜயோகம் கற்க வேண்டும். முழுமையாக புத்தியினுடைய வேலை யாகும். புத்தியில் தாரணை ஏற்படுகிறது. இல்லறவாசிகளுக்கோ மிகவும் உழைக்க வேண்டி யுள்ளது. இன்றைய நாட்களில் தமோபிரதானமாக இருப்பதால் மிகவும் அழுக்காகி விடுகின்றனர். மாயா அனைவரையும் தீர்த்து கட்டி விட்டது. ஒரேடியாக சாப்பிட்டு விடுகிறது. மாயை எனும் மலைப்பாம்பின் வயிற்றிலிருந்து

வெளியில் எடுப்பதற்காக தந்தை வருகிறார். வெளியேற்றுவது மிகவும் கடினமாகிறது. இல்லறத்தில் இருப்பவர்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டும். எங்களுடையது இராஜயோகமாகும் என்று புரிய வைக்க வேண்டும். நாம் பிரம்மாகுமார்-குமாரிகள் என்று ஏன் கூறுகிறோம்? இந்த புதிரை புரிந்துக் கொள்ள வேண்டும், புரிய வைக்கவும் வேண்டும் - உண்மையில் பி.கு. நீங்களும் தான். பிரஜாபிதா பிரம்மா புதிய சிருஷ்டியை படைக் கிறார். புதிய மனிதரின் மூலம் புதிய சிருஷ்டியை படைக்கிறார். உண்மையில் சத்யுகத்தின் முதல் குழந்தை யைத்தான் புதியவர் என்று கூறுவோம். எவ்வளவு குஷியான விஷயம். அங்கே குஷியின் பலவித வாத்தியங்கள் வாசிப்பார்கள். அங்கே ஆத்மா சரீரம் இரண்டும் தூய்மையாக இருக்கும். இங்கே இப்போது பாபா இவருக்குள் (பிரம்மாவுக்குள்) பிரவேசமாகியிருக்கிறார். இந்த புது மனிதர் தூய்மை யானவர் அல்ல. பழையவருக்குள் அமர்ந்து இவரை புதியவராக ஆக்குகிறார். பழைய பொருளை புதியதாக மாற்றுகிறார். இப்போது புதிய மனிதர் என யாரைச் சொல்லலாம்? பிரம்மாவைச் சொல்லலாமா? புத்தியின் சிந்தனை நடக்கிறது. அவர்கள் ஆதாம்-ஏவாள் யார் என்பதை அறிவ தில்லை. புதிய மனிதர் ஸ்ரீகிருஷ்ணர் ஆவார். அவர் தான் பிறகு பழைய மனிதர் பிரம்மா. பிறகு பழைய மனிதர் பிரம்மாவை புதிய மனிதராக ஆக்குகிறேன். புதிய உலகத்தின் புதிய மனிதர் தேவை. அவர் எங்கிருந்து வருவார்? புதிய மனிதர் சத்யுகத்தின் இளவரசர் ஆவார். அவரைத்தான் அழகானவர் என்று கூறுகின்றனர். இவர் கருப்பானவர், இவர் புதிய மனிதர் அல்ல. அதே ஸ்ரீ கிருஷ்ணர் 84 பிறவிகள் எடுத்து எடுத்து இப்போது கடைசி பிறவியில் இருக்கிறார், அவரை பிறகு பாபா தத்தெடுக்கிறார். பழையவரை புதியவராக்குகிறார். எத்தனை புரிந்துக் கொள்ள வேண்டிய ரகசியமான விஷயங்கள். புதியவரே பழையவர், பழையவரே புதியவர். கருப்பானவரே அழகானவர், அழகானவரே கருப்பானவர். பழையதிலும் பழையவராக இருப்பவரே புதியதிலும் புதியவராக ஆகிக்கொண்டிருக்கின்றனர். பாபா நமக்கு புத்துணர்ச்சி கொடுத்து புதியவர்களாக ஆக்கிக் கொண்டி ருக்கிறார் என்று நீங்கள் அறிவீர்கள். இவை மிகவும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். மேலும் தம் நிலையையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். குமார்-குமாரிகள் தூய்மையாகத்தான் இருக்கின்றனர். மற்றபடி நாம் இல்லறத்தில் இருந்தபடி தாமரை மலர் போல ஆகிறோம், சுய தரிசன சக்கர தாரி ஆகிறோம். விஷ்ணுபுரியைச் சேர்ந்தவர் களுக்கு திரிகாலதரிசி ஞானம் இல்லை. பழைய மனிதர் திரிகாலதரிசியாக இருக்கிறார். எத்தனை எதிரும்புதிருமான விஷயங்களாக உள்ளன. பழைய மனிதர்தான் ஞானத்தை எடுத்து புதிய மனிதராக ஆகின்றார். அது ஹட யோகம், இது இராஜ யோகம் என்று பாபா புரிய வைக்கிறார். இராஜ யோகம் என்றாலே சொர்க்கத்தின் இராஜ்யம். சுகம் என்பது காகத்தின் எச்சத்திற்கு சமம் என்று சன்னியாசிகள் கூறுகின்றனர். வெறுக்கின்றனர். தந்தை கூறுகிறார் - பெண்தான் சொர்க்கத்தின் நுழைவாயில். தாய்மார்கள் மீது கலசத்தை வைக்கிறேன். ஆக முதன் முதலாக புரிய வையுங்கள் - சிவாய நமஹ, பகவானுடைய மகாவாக்கியம். சப்தமாக ஓசை வெளிப்பட வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நாம் ஆத்மாக்கள் சகோதர-சகோதரர்களாக உள்ளோம் என்ற இந்த நிச்சயத்தின் மூலம் தூய்மையின் விரதத்தை கடை பிடித்து ஒருவருக்கொருவர் அன்புடன் இருக்க வேண்டும். அனைவரையும் அன்பானவர்களாக ஆக்க வேண்டும்.

2. விசால புத்தி உள்ளவராகி ஞானத்தின் ஆழமான ரகசியங்களைப் புரிந்து கொள்ள வேண்டும், மனன சிந்தனை செய்ய வேண்டு மாயையின் யுத்தத்திலிருந்து தப்பிப் பதற்காக ஆத்ம அபிமானி ஆகக் கூடிய பயிற்சி செய்ய வேண்டும்.

வரதானம் : ஞான அமிர்தத்தின் மழை மூலம் மகான் ஆகக்கூடிய மர்ஜீவா (மறுபிறப்பெடுத்தவர்) ஆகுக.

குழந்தைகளாகிய உங்கள் மீது பாபா ஞான அமிர்தத்தின் மழை பொழிவித்து, பிணத்திலிருந்து மகானாக ஆக்கி விட்டார். எரிந்து கொண்டிருக்கும் சிதையில் இருந்து எழுந்து நிற்கச் செய்து மர்ஜீவா ஆக்கி விட்டார். ஞான அமிர்தத்தை அருந்தச் செய்து அமரர் ஆக்கி விட்டார். மக்கள் சொல்கிறார்கள் - பகவான் பிணத்தையும் கூட உயிர்த்தெழச் செய்வார் என்று. ஆனால் எப்படிச் செய்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இப்போது குஷி உள்ளது - தேக அபிமானத்தின் காரணத்தால் முதலில் யார் இறந்து விட்ட பிணத்துக்குச் சமமாக இருந்தார்களோ, அவர்கள் இப்போது பிணத்தில் இருந்து மகானாக ஆகி விட்டார்கள்.

சுலோகன்: தர்மத்தில் நிலைத்திருந்து கர்மம் செய்பவர்களே தர்மாத்மா ஆவார்கள்.